# இலங்கையின் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் - 2024 சிந்தனைக்கான குறுங்கலந்துரையாடல்

பேராசிரியர் த.கிருஷ்ணமோகன்,
கலை கலாசார பீடம்

**அறிமுகம்**

சர்வதேசளவில் மக்கள் தங்கள் வாழ்க்கையை இன்று நிகழ்நிலையில் வாழ்கிறார்கள். நிகழ்நிலையில் மக்கள் வாழ்வதால், சர்வதேச நாடுகள் இணையத்தைப் பயன்படுத்தும் குழந்தைகள் மற்றும் பருவ வயதினரைப் பாதுகாப்பதற்கான சட்டங்களையும், விதிமுறைகளையும் உருவாக்குவதில் மிகவும் தீவிரமாகக் கவனம் செலுத்துகின்றன. ஐக்கிய அமெரிக்கா போன்ற சில நாடுகள் மாநில அரசாங்கங்களினூடக இச்சட்டங்களை உருவாக்கியுள்ளன. பிரித்தானியா போன்ற சில நாடுகள் தேசிய ஒழுங்குமுறையினை இலக்காகக் கொண்டு இச்சட்டங்களை உருவாக்கியுள்ளன. இவ்வழித்தடத்தில் இலங்கை அரசாங்கம் 2024 ஆம் ஆண்டு தை மாதம் இலங்கைக்கான நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றியது. இச்சட்டம் இலங்கையின் அரசியல், சமூகப் பொருளாதாரத் தளத்தில் பெரும் பேசுபொருளாக மாறியுள்ளது. இந்நிலையில் இக்கட்டுரை இச்சட்டம் தொடர்பான சிந்தனையினையும், கலந்துரையாடலையும் உங்கள் மத்தியில் தொடக்கிவைக்க விரும்புகிறது.

**பிரித்தானிய நிகழ்நிலைப் பாதுகாப்பு சட்டம்**

ஜனநாயகத்தின் தாய்நாடாகக் கருதப்படும் இங்கிலாந்தின் வரலாற்றில் முக்கிய பேசுபொருளாக மாறியிருந்த நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டம், நீண்ட மற்றும் சர்ச்சைக்குரிய சட்டவாக்கப் பயணத்தை மேற்கொண்டதன் பின்னர் 2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதி முடியின் ஒப்புதலைப் பெற்றது. இதன்பின்னர் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் 2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி இங்கிலாந்தில் தேசிய சட்டமாக மாறியது.

சட்டத்திற்குட்பட்டு மேற்கொள்ளப்படும் நிகழ்நிலை வர்த்தகத்தில் உள்ள சட்டவிரோத உள்ளடக்கத்தை அல்லது விடயங்களை அகற்றுதல், வயதுக் கட்டுப்பாடு அல்லது தீங்கிழைக்கும் உள்ளடக்கத்தைக் குழந்தைகள் பார்ப்பதைத் தடுத்தல், பயனாளிகள் பார்க்கும் மற்றும் தொடர்புகொள்ளும் உள்ளடக்கங்கள் அல்லது விடயங்களின் வகைகள் தொடர்பாக அதிகமான கட்டுப்பாட்டை வழங்கச் சட்டம் தேவைப்பட்டது. இத்தேவைகளுக்கு இணங்க சட்டத்திற்கு உட்பட்ட வர்த்தகங்கள் மற்றும் ஏனைய செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களின் வயது மற்றும் அடையாளங்களைச் சரிபார்ப்புச் செய்யும் நடவடிக்கைகள் தொடர்பாகச் சிந்திக்க வேண்டியேற்பட்டது.

நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் சட்டத்தின் வரம்பு மற்றும் உள்ளடக்கம் தொடர்பாக நீண்டகாலமாக அரசாங்கம், குழுக்கள், தொண்டு நிறுவனங்கள், பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குபவர்கள், மருத்துவ ஆய்வாளர்கள் மற்றும் குடும்பங்கள் குறிப்பாக நிகழ்நிலை பாதுகாப்புச்சட்டத்தின் உள்ளடக்கத்தைப்

பார்த்து தனது உயிரை மாய்த்துக் கொண்ட இளம்பெண் மோலி ரஸ்ஸலின் (Molly Russell) குடும்பத்தினர் உட்பட, பலரால் இச்சட்டம் ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. இச் சட்டம் பிரித்தானியாவை ”உலகில் நிகழ்நிலையில் பயணிப்பதற்குப் பாதுகாப்பான இடமாகவும், இலத்திரனியல் வர்த்தகத்தை வளர்க்கச் சிறந்த இடமாகவும்” மாற்றியமைக்கும் என வர்ணிக்கப்பட்டது. இதன்மூலம் பிரித்தானிய அரசாங்கம் தனது இலக்கினை அடைவது எளிதாக்கப்பட்டதாகவும் பாரட்டப்பட்டது.. நிகழ்நிலை சேவைகளை வழங்கும் வர்த்தக நிறுவனங்கள் சட்டவிரோத உள்ளடக்கம் அல்லது விடயங்களைத் தமது செயற்பாட்டின் மூலம் குறிப்பாகக் குழந்தைகளுக்குத் தீங்கு அல்லது அபாயங்களை விளைவிக்கும் விடயங்களை அடையாளம் கண்டு அவற்றைக் குறைக்கவும் மற்றும் நிர்வகிக்கவும் சட்டப்பூர்வப் பொறுப்புடைய நிறுவனங்களாக்கப்பட்டன.

இச்சட்டம் ஐரோப்பிய யூனியனின் இலத்திரனியல் சேவைகள் சட்டம் (Digital Services Act -DSA)) கொண்டுள்ள நோக்கங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதாகவும் பாராட்டப்பட்டது. இது தீங்குகளைக் குறைக்கவும், நிகழ்நிலை அபாயங்களை எதிர்த்துப் போராடவும் மற்றும் பயனாளிகளின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கவும் முயல்கிறது. ஐரோப்பிய யூனியனின் இலத்திரனியல் சேவைகள் சட்டம் 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்ததுடன், 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளில் நடைமுறைக்கு வந்துள்ளது.

**நிகழ்நிலைப் பாதுகாப்பு சட்டம் கூறுவது என்ன?**

பிரித்தானிய நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டம் என்பது ‘சமூக ஊடக நிறுவனங்கள், செய்தியிடல் செயலிகள் (messaging apps), தேடுபொறிகள் (search engines) மற்றும் ஏனைய இலத்திரனியல் தளங்களைப் பயன்படுத்தும் குழந்தைகள் மற்றும் வயதுவந்தவர்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க வடிவமைக்கப்பட்ட சட்டமாகும்’. பரந்தசட்டம் என விவரிக்கப்படும் இச்சட்டம் பல்வேறு வகையான சட்டவிரோத அல்லது தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்களைக் கோடிட்டுக் காட்டும் 200 க்கும் மேற்பட்ட உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதில் முக்கியமான உள்ளடக்கங்களாகப் பின்வருபனவற்றைக் கூறலாம்.

- சட்டவிரோத உள்ளடக்கத்தைக் கவனமாக ஆராய்ந்து அவற்றினைத் தளத்திலிருந்து அகற்றுதல். சட்டவிரோத உள்ளடக்கங்களாகப் பயங்கரவாதம், வெறுக்கத்தக்க பேச்சு, சுய-தீங்கு, சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம் மற்றும் பழிவாங்கும் ஆபாசப் படங்கள் போன்றன அடங்கும்.
- சட்டப்பூர்வமான ஆனால் தீங்கு விளைவிப்பதாகக் கருதப்படக்கூடிய உள்ளடக்கங்களை குழந்தைகள் அணுகுவதைத் (பார்ப்பதைத்) தடுத்தல். இதில் தீங்குதரும் உணவுவகைகளைப் பெருமையாகக் கூறுவது அல்லது ஊக்குவித்தல், சுய-தீங்கு மற்றும் தற்கொலைக்கான வழிமுறைகளை வழங்குவது,

கொடுமைப்படுத்துதல் அல்லது தீவிர வன்முறையுடன் தொடர்புடைய செயல்களைத் தடுத்தல் உள்ளடங்குகிறது.

- ஆபாசப் படங்கள் போன்ற வயதுவந்தோர்களுக்கான காட்சிகளைக் குழந்தைகள் தேடிப்பார்ப்பதைத் தடுத்தல்,
- வயதினை உறுதி செய்யும் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் வயது வரம்புகளை அமுல்படுத்துதல்,
- தாம் பயன்படுத்தும் தளங்களால் ஏற்படும் ஆபத்துகள் பற்றிய மதிப்பீடுகளை நடத்தி குழந்தைகளுக்குத் தெரியப்படுத்துதல்,
- பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் நிகழ்நிலை தொடர்பான பிரச்சனைகளைச் சந்திக்கும் போது அதற்கு எதிராக முறைப்பாடு செய்ய அவர்களுக்கு வழிமுறையை வழங்குதல்

வயதுவந்தவர்கள் நிகழ்நிலையில் இருக்கும்போது அல்லது தொடர்பு கொள்ளும் போது உள்ளடக்க வகைகளைக் கட்டுப்படுத்துவதையும் இச்சட்டம் எளிதாக்குகிறது. கொடுமைப்படுத்துதல், வன்முறை அல்லது சுய-தீங்கு போன்ற உள்ளடக்கங்களைப் பார்க்க விரும்பாத பயனாளிகள் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கத்தை வடிகட்ட இச்சட்டம் அனுமதிக்கிறது. மேலும் உறுதிப்படுத்தப்பட்ட பயனாளிகள் ஏனைய உறுதிப்படுத்தப்பட்ட பயனாளிகளுடன் தொடர்பு கொள்ள விரும்பினால் அவர்கள் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள மட்டும் இச்சட்டம் அனுமதிக்கிறது.

**இலங்கையில் நிகழ்நிலை பாதுகாப்புச்சட்டம்**

இலங்கையின் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் என்பது இணையப் பாதுகாப்பு சட்டம் என அழைக்கப்படுகிறது. இது 2023 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் மசோதா வடிவில் மக்கள் அபிப்பிராயத்திற்கும், விவாதத்திற்கும் விடப்பட்டு, 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. மனித உரிமைகள் அமைப்புக்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் இச்சட்டம் பேச்சுச் சுதந்திரத்தை முடக்கும் வழிமுறை என விமர்சித்தனர்.

இச்சட்டம் இலங்கையில் தடைசெய்யப்பட்ட அறிக்கைகள் நிகழ்நிலையில் பரிமாறப்படுவதைத் தடைசெய்யும் ஏற்பாடுகளை உருவாக்குதல் மற்றும் தடைசெய்யப்பட்ட நோக்கங்களுக்காக நிகழ்நிலைக் கணக்குகளைப் பயன்படுத்துவது மற்றும் உண்மைக்குப் புறம்பான நிகழ்நிலைக் கணக்குகள் பயன்படுத்துவதைத் தடுப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இதற்காக இச்சட்டம் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட நிகழ்நிலைப் பாதுகாப்பு ஆணைக்குழுவை நிறுவுகிறது. இவ்வாணைக்குழு சட்டவிரோதமானது எனக் கருதப்படும் உள்ளடக்கங்கள் வெளியிடப்படுவதைத் தண்டனைக்குரிய குற்றமாக்குகிறது. இத்தண்டனை தண்டப்பணமாக அல்லது சிறைத்தண்டனையாக அமையலாம்.

தரவுத் திருட்டு, சிறுவர் துஸ்பிரயோகம் மற்றும் இணையவழி மோசடிகள் உள்ளிட்ட இணையக் குற்றங்களுக்கு எதிராக இச்சட்டம் தயாரிக்கப்பட்டதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். மேலும் 2023ஆம் ஆண்டு இலங்கையில் 8,000 இணையக் குற்றச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் (Tiran Alles) தெரிவித்தார். இது போன்ற குற்றங்களுக்கு Facebook, WhatsApp, YouTube, Instagram, WeChat, TikTok, Telegram, Snapchat, X (formerly Twitter), LinkedIn, Quora போன்ற சமூக ஊடகத் தளங்கள் பயன்படுத்தப்படுவதாகக் குற்றம்சாட்டப்பட்டது.

அரசாங்கம் பேச்சு சுதந்திரத்தை நசுக்க முயற்சிக்கிறது என்ற கவலையை இச்சட்டம் உருவாக்கியுள்ளது. இச்சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, நாடாளுமன்றக் கட்டிடத்திற்கு வெளியே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நிகழ்நிலை வெறுப்பு பேச்சு மற்றும் தவறான தகவல்களை அல்லது வதந்திகளைப் பரப்புதல்களைத் தடுக்க அல்லது கட்டுப்படுத்துவது அரசாங்கத்தின் பிரதான கடமை எனலாம்.

ஆயினும் இந்த சட்டமூலம் அதன் வடிவமைப்பில் ஆழமான குறைபாடுகளைக் கொண்டுள்ளதுடன், மக்கள் வழங்கிய அதிகாரத்தைத் துஸ்பிரயோகம் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் இச்சட்டத்தினைப் பயன்படுத்துவதற்கு அதிக வாய்ப்புள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டது. இச்சட்டம் ‘‘கருத்து வெளியிடும் சுதந்திரத்தை நிலைநிறுத்தத் தவறிவிட்டது. அரசாங்கத்தின் நடத்தை மற்றும் பொதுக் கொள்கைகள் தொடர்பாகப் பொது வெளியில் நடைபெறும் விவாதத்தை அடக்குவதற்கு இச்சட்டம் பயன்படுத்தப்படும் அபாயம் உள்ளது,” என்று சர்வதேசச் சட்டவல்லுனர் ஆணையம் (International Commission of Jurists-ICJ) தின் சட்ட மற்றும் கொள்கை இயக்குநர் இயன் சீடர்மேன் (Ian Seiderman) கூறுகின்றார். இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இச்சட்டம் ”இந்த நாட்டில் கருத்துச் சுதந்திரத்திற்காக எஞ்சியிருக்கும் சில பாதுகாப்புகளைச் சிதைத்து ஜனநாயகத்தை அழிக்க முயற்சிக்கும் அரசாங்கத்தின் வெளிப்பாடாகும்” எனத் தெரிவித்திருந்தார். ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷா டி சில்வா (Harsha de Silva) இச் சட்டமூலத்தின் விளைவுகள் தொடர்பாகப் பின்வருமாறு விபரிக்கிறார் ”எமது ஜனநாயகத்திற்கு இது அச்சுறுத்தல். இலங்கையில் இலத்திரனியல் வர்த்தகத்தை விரிவுபடுத்துவதில் இது கடுமையான எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தும். இலத்திரனியல் வர்த்தகம் நமது இளைஞர்களுக்குத் தொழில் வழங்குவதற்கும், அவநம்பிக்கையான நமது பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும் பெரிதும் உதவுகிறது.”

இக்குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளித்த பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரன் அலஸ் ‘‘இச்சட்டத்தின் நோக்கம் சமூகஊடகங்களை அல்லது எதிர்க்கட்சிகளை

அடக்குவது அல்ல. முறைப்பாடுகளை நிகழ்நிலை பாதுகாப்பு ஆணைக்குழு பெற்றுக்கொள்ளும். இது தகவல் தொழில்நுட்பவியல், சட்டம், நிர்வாகம், சமூகசேவைகள், ஊடகவியல், விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பவியல் அல்லது முகாமைத்துவம் ஆகிய துறைகளின் ஒன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் தகைமைகள் மற்றும் அனுபவத்தைக் கொண்ட ஆட்களிலிருந்து அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கு அமைவாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் எனத் தெரிவித்திருந்தார்.

**தடைசெய்யப்பட்ட நிகழ்நிலை குற்றங்கள்**

- தேசிய பாதுகாப்பு, பொது சுகாதாரம் அல்லது பொது ஒழுங்கிற்கு அச்சுறுத்தல் அல்லது தவறான மற்றும் விரோத உணர்வுகளை ஊக்குவிக்கும் தவறான அறிக்கைகளை வெளியிடுதல்,
- வேண்டுமென்றே கலவரத்தைத் தூண்டும் தவறான அறிக்கைகள் மற்றும் மதச் சடங்குகளுக்கு ”தொந்தரவு” ஏற்படுத்தும் தவறான அறிக்கைகளை நிகழ்நிலையில் வெளியிடுதல்,
- எந்தவொரு சமூகத்தவர்களினதும் மத உணர்வுகளைத் தூண்டி அவர்களைக் கோபம் கொள்ளும் வகையில் வெளியிடப்படும் அறிக்கைகள்,
- முப்படைகளின் எவரேனும் அலுவலர் அல்லது வீரர்களைக் கலகம் விளைவிக்கச் செய்யும் உள் நோக்கத்துடன் அல்லது பொதுமக்களுக்குப் பயத்தை அல்லது அச்சத்தை ஏற்படுத்தி அரசுக்கெதிராக அல்லது பொதுமக்களின் அமைதிக்கெதிராக தவறொன்றைப் புரிவதற்கு வேறு எவரேனும் ஆளைத் தூண்டும் உள் நோக்கத்துடன் தவறான அறிக்கையினை வெளியிடுதல்,
- அந்தரங்கத் தகவலை வெளியிடுவதன் மூலம் கூற்றொன்றை திட்டமிட்டவகையில் வேண்டுமென்று கூறுகின்றவர் அல்லது அறிவிக்கின்றவரும், அதன் விளைவுக்கு இலக்காகும் ஆளுக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்குத் தொல்லையை ஏற்படுத்துகின்ற ஆளும் தவறான செயலில் ஈடுபடுபவராகக் கருதப்படுவார்,
- அந்தரங்கத் தகவல் என்பது, எவரேனும் ஆள் அந்தரங்கமாக வைத்திருப்பதற்கு நியாயமான முறையில் எதிர்பார்க்கக்கூடிய ஏதேனும் படம், கட்புல அல்லது செவிப்புல விபரங்கள் உட்பட தனிப்பட்ட தகவல் எனப்பொருள்படும். இவற்றை வேறு ஏதேனும் தவறைப் புரிவதற்குச் சான்றாகப் பயன்படுத்தக்கூடாது,
- ஆளொருவரை அச்சுறுத்தும் அல்லது அதிர்ச்சியூட்டும் அல்லது துன்பமிழைக்கும் அல்லது ஆளொருவரின் கௌரவத்தை மீறும் அல்லது பயமுறுத்தும், மதிப்பைக்குறைக்கும், பகமையுடன் அவமானப்படுத்தும் அல்லது தீங்குவிளைவிக்கின்ற சூழல் ஒன்றை உருவாக்கும் உள்நோக்கம் கொண்டுள்ள அல்லது இத்தகைய எல்லா நோக்கங்களையும் கொண்டுள்ள செயல் அல்லது நடத்தைகள் (தொல்லை) குற்றமாகும்,

- நிகழ்நிலைக் கணக்கொன்றினூடாக அல்லது நிகழ்நிலை அமைவிடமொன்றினூடாகச் சிறுவர் ஒருவரை நிந்தனைக்குட்படுத்துதல் (கட்டாயப்படுத்துதல்) அல்லது ஆபாசத்தன்மையான ஏதேனும் புகைப்படத்தை அல்லது கேட்பொலியை (யுரனழை) அல்லது காணொளியை வெளியிடுதல் குற்றமாகும்.

**நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்ட அமுலாக்கம்**

தடைசெய்யப்பட்ட கூற்றொன்றின் இணையவழித் தொடர்பாடலினால் இன்னலுற்ற ஆளொருவர், எழுத்தில் அல்லது இலத்திரனியல் வடிவத்தில் இத்தகைய தொடர்பாடல் தொடர்பான தகவல்களை வழங்கி ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்றைச் செய்யலாம்.

தடைசெய்யப்பட்ட கூற்றொன்று நிகழ்நிலையில் வெளியிடப்பட்டுள்ளது என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளதாக ஆணைக்குழு அபிப்பிராயப்படுமிடத்து ஆணைக்குழு அலுவலர்கள் புலனாய்வுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இத்தகைய புலனாய்வுகளின் போது தடைசெய்யப்பட்ட கூற்றை அறிவித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர் இது தொடர்பான விளக்கமளிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுதல் வேண்டும்.

தடைசெய்யப்பட்ட கூற்றொன்று வெளியிடப்பட்டுள்ளது என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உள்ளதாக ஆணைக்குழு திருப்திப்படின், இவ்விடயத்தின் பாரதூரமான தன்மையையும், இத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்றினால் விளைவிக்கப்பட்ட சேதம் அல்லது தீங்கின் சாத்தியக்கூறையும் கவனத்தில் கொண்டு இத்தகைய தடைசெய்யப்பட்ட கூற்று புழக்கத்தில் விடப்படுவதைத் தடுப்பதற்கான வழி முறைகளை எடுக்குமாறு தடைசெய்யப்பட்ட கூற்றை வெளியிட்ட நபருக்கு அறிவித்தல் வழங்கலாம். அதற்கு அவர்கள் இணங்கவில்லையாயின் தடைசெய்யப்பட்ட அறிக்கையை 24 மணி நேரத்திற்குள் நிகழ்நிலைத் தளத்திலிருந்து அகற்றுமாறு இணையச் சேவை வழங்குநருக்கு ஆணைக்குழு அறிவிப்பை வெளியிடலாம்.

குற்றவாளி அல்லது இணையச்சேவை வழங்குநர் ஆணைக்குழுவின் அறிவித்தல்களுக்கு இணங்கவில்லையாயின் தடைசெய்யப்பட்ட அறிக்கை புழக்கத்தில் விடப்படுவதைத் தடுக்க உத்தரவிடக் கோரி ஆணைக்குழு நீதிவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம். சட்ட விதிகளின்படி குற்றம் சாட்டப்பட்ட நபர் நீதிவான் நீதிமன்றத்தால் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் அவருக்குச் சிறைத்தண்டனை அல்லது அபராதம் விதிக்கப்படலாம். நீதிவான் நீதிமன்ற உத்தரவுக்கு குற்றவாளி இணங்கத் தவறினால் அதுவும் குற்றமாகக் கருதப்பட்டு அதற்கும் சேர்த்து அவருக்குச் சிறைத்தண்டனை அல்லது அபராதம் விதிக்கப்படலாம்

**சிந்திக்கவேண்டிய விடயங்கள்**

சர்வதேச இணைய வழங்குநர்கள் மற்றும் பல்வேறு அக்கறையுள்ள தரப்பினரால் கவலைகள் எழுப்பப்பட்ட போதிலும், இலங்கை நாடாளுமன்றம் 2024 ஆம் ஆண்டு

ஜனவரி மாதம் 24 திகதி நிறைவேற்றியுள்ள நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக தான் உன்னிப்பாகக் கண்காணிப்பதாக ஐக்கிய இராச்சியம் தெரிவித்தது. ''நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டத்தின் சாத்தியமான எதிர்மறை தாக்கங்கள் குறித்து சிவில் சமூகம், எதிர்க்கட்சிகள் மற்றும் சர்வதேச இணைய வழங்குநர்கள் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு, பொதுநலவாய மற்றும் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அன்னா-மேரி ட்ரெவெலியன் (யுநெ-ஆயசநை வுசநஎநடலயு) இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

கருத்துச் சுதந்திரம் மற்றும் பொருளாதார வளர்ச்சி மீதான தாக்கம் குறித்து பிரித்தானியா கவலையடைந்துள்ளதாகத் தெற்காசியாவிற்கான இராஜாங்க அமைச்சர் பிரபு (தாரிக்) அஹ்மட் (Lord (Tariq) Ahmad) ஜனவரி மாதம் 25ஆம் திகதி இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை (Ali Sabry) சந்தித்தபோது தான் தெரிவித்ததாக பிரித்தானியப் பாராளுமன்றத்தில் எழுத்துமூல அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

புதிய சட்டம் கருத்து சுதந்திரத்தை மீறுவதாகவும், எதிர்காலத்தில் இலத்திரனியல் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் வாதிட்ட தொழில்துறை பங்குதாரர்கள் உட்பட பல்வேறு மூலைகளிலிருந்து முன்வைக்கப்பட்ட விமர்சனங்களையும் அரசாங்கம் கருத்திலெடுத்துள்ளது.

இந்நிலையில் இலத்திரனியல் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய பாதிப்பு குறித்து தொழில்துறை பங்குதாரர்களின் கவலைகளுக்கும் மத்தியில் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டத்தில் இணைக்கப்பட வேண்டிய புதிய திருத்தங்களை அரசாங்கம் உருவாக்கியுள்ளது.

தொழில்துறையின் காட்சித்தளங்களை (ஏநைறிழசவள) எதிர்காலத்தில் அரசாங்கம் புறக்கணிக்க முடியாது. ஐக்கிய நாடுகள் சபையின் கருத்தாகிய ''தாய் மற்றும் சிசு மரணத்தைக் குறைத்தல், நிலைத்திருக்கும் விவசாயம், கண்ணியமான வேலைகளை ஊக்குவித்தல், உலகளவில் கல்வியறிவை வளர்த்தல், கொடிய வறுமையை முடிவுக்குக் கொண்டுவருதல் உட்பட 17 நிலைத்திருக்கும் அபிவிருத்தி இலக்குகளின் முன்னேற்றங்கள் மற்றும் சாதனைகளை இலத்திரனியல் விரைவுபடுத்தும்'' என்ற கருத்தையும் புறக்கணிக்க முடியாது.

COVID-19 தொற்றுநோய் இலத்திரனியல் பரிமாற்றத்தைத் துரிதப்படுத்தியதுடன், சமூகங்கள் மற்றும் வர்த்தகச் செயல்முறைகளில் மாற்றத்தையும் உருவாக்கியது. மெட்ரா, கூகுள், ஏடபிள்யூஎஸ், மைக்ரோசாப்ட் (Meta, Google, AWS, Microsoft) போன்ற சமூக ஊடகங்கள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் ஆதரவுடன் இலத்திரனியல் தளங்கள் தொற்றுநோய் காலத்தில் இலங்கையில் வர்த்தகச் செயல்முறைகளுக்கு உதவியது. தொலைதூரத்திலிருந்து வேலை செய்தல் (Remote Work) மற்றும் நிகழ்நிலை செயல்பாடுகளுக்கு நாடு முடக்கப்படிருந்த காலத்தில் இரத்திரனியல் தளங்கள் இலங்கைக்கு உதவியுள்ளன. இதனைப் பயன்படுத்தி இலங்கை வர்த்தக முயற்சிகள்

குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர வர்த்தக முயற்சியாளர்கள் இக் காலகட்டத்தில் தங்கள் வர்த்தகங்களை மேற்கொள்வதற்கு இலத்திரனியல் தளங்களைப் பயன்படுத்தியிருந்தனர்.

தற்போது இலங்கையின் இலத்திரனியல் பொருளாதாரம் சுமார் 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.37 வீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதேநேரம் ஏற்றுமதிகள் சுமார் 1.25 பில்லியன் அமெரிக்க டொலர்கள் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

2030 ஆம் ஆண்டுக்குள் இந்த எண்ணிக்கையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதமாக உயர்த்தவும், அதன் மூலம் இலத்திரனியல் பொருளாதாரப் பங்களிப்பை 3.5 பில்லியன் அமெரிக்க டாலர்களில் இருந்து 15 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்த்தவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

இலங்கையை இலத்திரனியல் முதலீடுகளுக்கான கவர்ச்சிகரமான இடமாக மாற்றுவதற்கான வழிமுறைகள் இருந்தால் மட்டுமே இலத்திரனியல் பொருளாதார இலக்குகளை அடையமுடியும். இலங்கை அரசினால் வரிச் சலுகைகள் மற்றும் ஏனைய நிதிச் சலுகைகளை மக்களுக்கு வழங்க முடியாது. ஆயினும், உலகளாவிய வர்த்தகத் தரநிலைகளுக்கு இணங்கக்கூடிய பொருளாதாரக் கொள்கை முன்முயற்சிகளை முன்வைப்பதன் மூலம் பொருளாதாரத்தைக் கவர்ச்சிகரமானதாக மாற்றமுடியும் என்ற எதிர்பார்ப்பு பொருளாதார வல்லுனர்களிடம் உள்ளது.

**முடிவுரை**

பிரித்தானியா போன்ற நாடுகளில் நிகழ்நிலை பாதுகாப்புத் தொடர்பான சட்டங்களுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் நிகழ்நிலைப் பாதுகாப்புச்சட்டம் தெளிவான வரையறைகள், கருத்துச் சுதந்திரம், சிறுவர் தொடர்பாகப் பாதுகாப்பு வழங்குதல் என்பவற்றில் குறைபாடுடையதாகவுள்ளது. இலங்கையின் நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டம் சர்வதேசத் தரநிர்ணயளவிலான நடைமுறையின் அடிப்படையில் உருவாக்கப்படவில்லை என்பதும், வெளிப்படையான ஆலோசனைச் செயல்முறைகளைப் பின்பற்றவில்லை என்பதும் கவலைளிக்கிறது. எனவே, சட்டக் கண்ணோட்டத்தில் மட்டுமல்லாமல், தொழில்நுட்பக் கண்ணோட்டத்திலும் எதிர்காலத்தில் நிபுணர்களால் இச்சட்டம் மேலும் மீளாய்வு செய்யப்படுதல் பொருத்தமானதாக அமையும் என நம்பலாம்.

For more detailed reading;

Online Safety Act, No 9 of 2024 which was published on 2nd of February, 2024 as a supplement to part-II of the Gazzete of Sri Lanka.